# A SOCIAL INVESTIGATION OF CENTRAL BANK'S BOND CORRUPTION IN SRI LANKA.

R.Alaguraja,
Final Year, Department of Sociology, University of Jaffna.
*raja24krishna@gmail.com*

**Abstract**

Bond corruption is the biggest registered corrupt action in Sri Lanka's political history. Bond corruption directly connected central bank of Sri Lanka. The central bank of Sri Lanka is the monetary authority of Sri Lanka and promoting the development of the responsible for securing price stability and financial system stability. A consensus has now been reached that corruption is universal. Sri Lanka is also worried about this problem. It undermines democracy and the rule of low, leads to violations of human rights, erodes the quality of life and allows organized crime, terrorism and other threats of human security to flourish (UNDP,2008). The main objective of this study does the social investigation about bond corruption. Secondary data used to the study and Data were gathered from relevant books, newspapers, Government reports, Internet sources. The content analysis techniques was applied for data analysis. By analyzing the data. Bond corruption occurred between 2015 January to 2016 August. Sri Lanka Government loosed 11,145 million rupees. And National financial institution were affected such as Maha pola students scholarship fund, National serving bank, Employee provident found through bond corruption , people's serving habits also affected and this problem made the political instability , It connects direct and indirectly variation social, political, economic issues of the country. Investigation reports of the Parliament Committee On Public Enterprises (COPE) Groups and Presidential commissions were hand over to the Attorney central and Investigations are going on about the bond corruptions. Government have to make progress in the fight against corruption. Reform public administration and Finance management, Promote transparency and access to information, awareness to the peoples again corruptions. Active engage of the public and civil society is essential in order to curb corruption in public sector of Sri Lanka.

Key words - Bond, Corruption, Develepment, Domcracy, Good Government.

**ஆய்வு அறிமுகம்.**

இலங்கையில் இடம்பெற்ற ஊழல்களில் பதிவுசெய்யப்பட்ட பெரிய ஊழலாக மத்திய வங்கி பிணைமுறி மோசடி ஊழல் காணப்டுகின்றது. 2015 ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 2016 பெப்ரவரி மாதம் வரையில் இடம்பெற்ற இவ் ஊழல் நடவடிக்கை இலங்கை வரலாற்றில் மோசமான உழலாக பதிவுசெய்யப்படடுள்ளது.

உழல் என்பதனை தனிப்பட்ட இலாபம் கருதிய நம்பிக்கையுடன் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வது என பரந்த வகையில் வரைவிலக்கணப்படுத்தலாம்.ஊழல் நடவடிக்கைகள் அரச இயந்திரத்தின் சிறிய மட்டத்தில் இருந்து உயரிய பதவிகள் வரை பரவியுள்ள ஒரு சமூக நோயாக காணப்டுகின்றது.

**1954 ஆம் ஆண்டின் இலஞ்ச சட்டமும் 1994 அண்டின் 19 இல இலஞ்ச ஊழல் விசாரனைசட்டம் பின்வருமாறு ஊழலை வரையறைசெய்கின்றது.**

எவராவது அரச ஊழியர்கள் அரசாங்கத்துக்கு தவறான அல்லது சட்ட விரோதமான நட்டத்தை ஏற்படுத்தும் நோக்கில் ,அல்லது தனக்கு அல்லது எவராவது நபருக்கு ஒரு தவறான அல்லது சட்டவிரோதமான நன்மையை உதவியை அல்லது அனுகூலத்தை வழங்கும் நோக்கில் ,அல்லது எவராவது நபருக்கு அல்லது அரசாங்கத்துக்கு

தவறான அல்லது சட்டவிரோதமான நட்டம் ஏற்படும் என்பதனை ,அல்லது எவராவது நபருக்கு தவறான சட்ட விரோதமான நன்மை , உதவி அல்லது அனுகூலம் ஏற்படும் என்பதனை அறிந்துக்கொண்டு,

அ. அரச ஊழியர் என்ற வகையில் தனது பதவி காரணமாக செய்வதற்கு அதிகாரத்தைக் கொண்டுள்ள எதாவது செயலை செய்தல் அல்லது செய்யாதிருத்தல்,ஆ. அரச ஊழியர் என்ற வகையில் ஒருவர் வகிக்கும் பதவி காரணமாக செய்வற்கு அதிகாரத்தை கொண்டுள்ள ஓரு செயலை வேறு எவராவது அரச ஊழியர் செய்வதற்கு அல்லது செய்யாது விடுவதற்கு துண்டுதல்,இ. ஒரு அரச ஊழியர் என்ற வகையில் தனது பதவி காரணமாக கிட்டும் தகவலை பயன்படுத்தல்,ஈ. ஒரு அரச ஊழியர் என்ற வகையில் தனது பதவிகாரணமாக எடுக்கும் தீர்மாணத்தில் பங்குபற்றல்,உ. ஒரு அரச ஊழியர் என்ற வகையில் தனது பதவியை பயன்படுத்தி வேறு எவராவது நபரை எதாவது செயலை செய்யுமாறு அல்லது செய்யாமல் விடுமாறு நேரடியாகவே அல்லது மறைமுகமாகவே தூண்டுபவர் ஊழல் குற்றத்ததை புரிந்தவராவர் என்பதோடு பத்து வருடத்துக்கு மேற்படாத சிறைதண்டனை அல்லது ஒரு லட்ச்சம் அபராதமும் விதிக்கப்பட கூடியவருமாவர் எனக்குறிப்பிடுகின்றது.

2015 ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றதுக்கு பின் இலங்கையின் புதிய அரசியல் மாற்றமாக ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி ஆகிய பிரதான கட்சிகளும் ஏனைய சில சிறிய கட்சிகளும் இணைந்து கூட்டு அரசாங்கத்தை ஸ்தாபித்தது இதன் பின்னர் இலங்கை மத்திய வங்கியின் ஆளுனராக ஆர்ஜுன் மகேந்திரன் நியமிக்கப்பட்டார் இந்நிலையில் இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி விநியோக செயற்பாட்டில் 2015 ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 2016 ஆண்டு பெப்ரவரி மாதம் வரையில் பாரிய ஊழல் மோசடி இடம்பெற்றமை கண்டறியப்பட்டது.

இது தொடர்பில் 2015 ஆண்டு பிரதமர் தலைமையிலான பிட்டிபல குழு 2016 ஆண்டு கோப் குழு ஆகியன தனது அறிக்கையை சட்டமா அதிபரிடம் கையளித்தது பின்னர் 2017 ஆண்டு ஜனாதிபதி ஆணைக்குழு துரித விசாரணைகள் செய்து 2017 ஆண்டு டிசம்பர் 30 திகதி ஜனாதிபதியிடம் கையளித்தது இது தொடர்பான வழக்குவிசாரணையும் நீண்ட கால இழத்தடிப்புகளுக்கு மத்தியில் இடம்பெற்றுவருகின்றது. இலங்கையில் ஊழலானது முக்கிய பிரச்சினையாக காணப்படுகின்றது. Transparency international sri lanka 2010 அறிக்கையின் படி இலங்கை ஊழல் சுட்டி பெறுமான அடிப்படையில் 178 நாடுகளில் 91வது இடத்தில் உள்ளது. வளர்ந்து வரும் இலங்கையில் ஊழல் என்பது சமூக நோய்நிலமையை ஏற்படுத்தும் ஒரு சமூகப்பிரச்சினையாகும்.

**ஆய்வு நோக்கம்**

**3.1 பொது நோக்கம்**

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி ஊழல் தொடர்பான சமூக விசாரனை மேற்கொள்ளல்.

**3.2 சிறப்பு நோக்கம்**

- இலங்கையில் பிணைமுறி ஊழல் ஏற்படுத்திய பொருளாதார விளைவுகளை இனம்காணல்
- இலங்கையில் பிணைமுறி ஊழல் ஏற்படுத்திய அரசியல் ரீதியான விளைவுகளை இனம்காணல்
- இலங்கையில் பிணைமுறி ஊழல் ஏற்படுத்திய சமூக ரீதியான விளைவுகளை இனம்காணல்.
- இலங்கையில் ஊழல எதிர்ப்புக்காக சட்ட பொறிமுறையை அறிதல்.
- இலங்கையில் பிணைமுறி ஊழல் தொடர்பில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை இனங்காணல்.

**ஆய்வு வினாக்கள்**

- இலங்கையில் மத்திய வங்கி பிணைமுறி ஊழலுக்கும் பொருளாதார நெருக்கடிக்குமான தொடர்பு யாது?
- இலங்கையில் மத்திய வங்கி பிணைமுறி ஊழலுக்கும் அரசியல் நெருக்கடிக்குமான தொடர்பு யாது?
- இலங்கையில் மத்திய வங்கி பிணைமுறி ஊழல் இலங்கையில் ஏற்படுத்திய சமூக விளைவுகளை என்ன?
- இலங்கையில் ஊழலுக்கு எதிராக காணப்படும் சட்டப்பெறிமுறையின் வினைத்திறன் எவ்வாறு காணப்படுகின்றது?

❖ இலங்கையில் பிணைமுறி உழலுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எவை?

**ஆய்வு முறையியல்**

**5.1 ஆய்வு வடிவம்**

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி ஊழல் தொடர்பான சமூகவிசாரனை என்னும் ஆய்வானது பண்புசார் ஆய்வாக மேற்கொள்ளப்பட்டது.

**5.2தரவுசேகரிப்பு நுட்பம்**

ஆய்வானது இரண்டாம் நிலை தரவுகளை அடிப்படையாக கொண்டு முன்னேடுக்கப்பட்டது. அந்த வகையில் வீரகேசரி தினசரி நாளிதலில் 2017.07.01 திகதி முதல் 2018.06.31 வரையான காலப்பகுதியில் வெளிவந்த பிணைமுறி ஊழலுடன் தொடர்புபட்ட செய்திகளினை அடிப்படையாக கொண்டு இவ் ஆய்வாய்வுக்கான தரவுகள் திரட்டப்பட்டது மேலும் தரவுகளை உறுதி செய்வதற்காக வடமாகணத்தை மையப்படுத்தி வெளிவரும் உதயன் , வலம்புரி, தினகுரல் ஆகிய பத்திரிகைகளில் இக்காலப்பகுதியில் வெளிவந்த செய்திகளுடன் ஒப்பிட்டு தரவுகள் உறுதிசெய்யப்பட்டது.

**5.3 தரவுப்பகுப்பாய்வு**

பத்திரிகை செய்திகளை உள்ளடக்கப்பகுப்பாய்வு ஊடாக தரவுப்பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுக்கலந்துறையாடல்**

இலங்கையின் தலைமை நிதி நிறுவனமான மத்திய வங்கியில் 2015 ஜனவரி முதல் 2016 பெப்ரவரி வரையான காலப்பகுதில் இடம்பெற்ற பிணைமுறி ஏல நடவடிக்கையின் போது பாரிய ஊழல் இடம்பெற்றது.அரசாங்கம் வரவுசெலவு திட்டத்தின் போது ஏற்படும் பற்றாக்குறைகளை ஈடுசெய்வற்காக உள்நாட்டில் நிதி திரட்டும் வழிவகைகளாக திறைசேரி உண்டியல்கள்,ரூபா கடன்கள் ,திறைச்சேரி முறிகள் , இலங்கை அபிவிருத்தி முறிகள் ஆகிய விடயங்கள் காணப்படுகின்றது. இவற்றின் மூலம் அரசு நிதியீட்டல் செயற்பாடுகளினை மத்திய வங்கியின் ஊடாக மேற்கொள்ளும்.

ஒரு நாட்டிலுள்ள அனைத்து நிதி நிறுவனங்களையும் கட்டுப்படுத்தி , நெறிப்படுத்தி நாணயக் கொள்கை ஊடாக பேரின பொருளாதார இலக்குகளை அடையும் ஓர் தனிப்பெரும் நிதி நிறுவனமே மத்திய வங்கியாகும். இலங்கையில் மத்திய வங்கி 1949 ஆண்டு ஆறம்பிக்கப்பட்டது. டீக்காக் என்பவர் நாட்டின் வங்கி முறைமைக்கும் பண முறைமைக்கும் தலைவனாக விளங்கும் வங்கி மத்திய வங்கியாகும் எனக்குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு மத்திய வங்கிகள் மற்றும் ஏனைய அரச நிதி நிறுவனங்கள் அரசின் திட்டங்களுக்கான நிதி மூலமாக காணப்படுகின்றன அந்தவகையில் 2015 ஆண்டு அரசாங்கம் மத்திய வங்கியின் ஊடாக அரச திட்டங்களுக்காக நிதி திரட்டும் போது தான் பிணைமுறி ஊழல் இடம்பெற்றுள்ளது. சில அரச அதிகாரிகள் ஆதரவுடன் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுனரான அர்ஜுன் மகேந்திரன் தன் மருமகனான அலோசியஸ்வுடன் இணைந்து இவ் ஊழல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

**பிணைமுறி என்றால் என்ன?**

அராசாங்கம் வரவு செலவு திட்டம் ஊடாக அடுத்த ஆண்டுக்கான நிதி திட்டமிடலை மேற்கொள்ளும். இதில் பெருப்பாலும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வரவுசெலவு திட்டங்கள் வரவை விட செலவு அதிகமாக காணப்படும். அதாவது துண்டுவிலும் தொகை அதிகமாக காணப்படும். எனவே அரசாங்கம் பற்றாக்குறையான வரவு செலவுதிட்டத்தை ஈடுசெய்வதற்கு உள்நாட்டு, வெளிநாட்டுக்கடன்களை பெறுவதுண்டு அந்தவகையில் மத்திய வங்கி ஊடாக வட்டிக்கு கடன் பெறும்.

மத்திய வங்கி இவ்வாறு பெற்றுக்கொள்ளும் கடன்களுக்கு ஈடாக எதனையாவது கொடுக்க வேண்டும் அந்த ஈடுதான் திரைச்சேரி உண்டியல்களும் பிணைமுறிகளும் ஆகும் திறைச்சேரி உண்டியல்களும் ,பிணையங்களும் ஆகும் இவை எத்தன்மையானது என்றால் வெரும் காகிதமே இது ஒரு உறுதிச்சான்றிதல் ஆகும். இறைமையுள்ள நாட்டின் தலைமை நிதி நிறுவனமான மத்திய வங்கியினால் விநியோகிக்கும் இவ் பத்திரத்துக்கு ஒரு மதிப்பு உள்ளது.

உத்தரவாத நம்பிக்கையின் அடிப்படையில் கடன்கள் வழங்குவதற்கு உரிய காலத்தில் மத்திய வங்கி தான் பெற்றுகொண்ட கடன்களை திரும்ப செலுத்தி விநியோகித்த உறுதிச்சான்றிதல்களை பெற்றுக்கொள்ளும்

மத்திய வங்கி பிணைமுறிகனை விற்பனை செய்யும் போது ஏற்கனவே தங்களிடம் பதிவு செய்துள்ள கொள்வனாளர்களுக்கு முன்னுறிமை அளிப்பதுண்டு மற்றும் அவை குறித்த பிணைமுறி கொள்வனவும் செய்யும் அறிவித்தல் ஊடகம் ஊடாக இடம்பெறும் இவ்வாறு பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் பினைமுறிகளை கொள்வனவு செய்துதான் பெறுகின்ற வட்டியினை விட அதிக வட்டிக்கு பிற நிறுவனங்களுக்கு கைமாற்றுவன் ஊடாக பிணைமுறி வியாபார பண்டமாக மாற்றப்படுகின்றது அதாவது இரண்டாம் நிலை சந்தையில் இது வியாபார பண்டமாக மற்றப்டுகின்றது.

**அர்ஜுன் மகேந்திரன் அலோசியஸ், கசுன்பலிசேன ஆகியோருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றங்கள்**

மத்திய வங்கியின் பிணைமுறி ஏலத்தில் இடம்பெற்ற மோசடியானது இலங்கையின் பின்வரும் சட்டங்களின் கீழ் பாரிய குற்றமாகும்.1988ம் ஆண்டில் 76ஆம் இலக்க ,1999ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க பொதுச்சொத்து துஷ்பிரயோக சட்டத்தின் கீழ் பிணைமுறி ஏல மோசடி குற்றமாகும். அத்துடன் அது தண்டனை சட்டக் கோவையின் 389,381இன் கீழும் குற்றமாகக் கருதப்படுகின்றது. மற்றும் சட்டவிரோத பயன்பாடு எனும் குற்றம் பொது சொத்தான அரச பணம் தொடர்பில் புரியப்பட்டுள்ளதால் மத்தியவங்கி ஆளுனராக இருந்து கொண்டு அர்ஜுன் மகேந்திரன் 1988ம் ஆண்டின் 76ம் இலக்க மற்றும் 1999ஆம் ஆண்டின் 12ம் இலக்க பொதுச் சொத்து துஷ்பிரயோக சட்டத்தின் கீழ் புரியப்பட்ட குற்றமாகும். அதன் அத்தியாயம் 5(1) கீழ் கூறப்படும் தண்டனை சட்ட கோவையானது 386ஆம் அத்தியாயத்தின் கீழான குற்றமாகும். (வீரகேசரி,2018.02.03.) போன்ற சட்டங்களின் கீழ் பரிய குற்றமாக கருதப்படுகின்றது.

**குற்றங்கள் தொடர்பான சட்டங்களில் உள்ள குறைபாடுகள்**

அர்ஜுன் மகேந்திரன்.அலோசியஸ், பலியசேன மீது பொதுச்சொத்து துஷ்பிரயோகசட்டத்தின் கீழ் வழக்கு தொடுத்தது தொடர்பில் விவாதங்கள் காணப்படுகின்றன. ஊழியர் சேமலாப நிதியத்தின் பணம் எவ்வாறு பொதுச்சொத்தாகும். அது ஒரு தனிப்பட்ட நிறுவனத்தின் பணம் என சில சட்டத்தரணிகள் எடுத்துக்காட்டுகின்றனர். (வீரகேசரி, 06.02.2018., 17p.)

அர்ஜீன் மகேந்திரன் சிங்கப்பூர் பிரஜையாகக் காணப்படுகின்றனர் ஆக அவர் மீதான சட்ட நடவடிக்கைகள் என்பது சிங்கப்பூரின் ஒத்துழைப்புடன் தான் மேற்கொள்ள வேண்டும்.நடைமுறையில் உள்ள சட்டத்தின்படி பிணைமுறி ஊழல் குற்றங்களை விசாரிப்பதாயின் நீண்ட நாள் விசாரணை தேவை என சட்டவிதிகளால் எடுத்துக் கூறப்படுகிறது. (வீரகேசரி,06.02.2018., 17p.)

**பிணைமுறி ஊழலின் பொருளாதார,அரசியல்,சமூக விளைவுகள்**

**பொருளாதரவிளைவுகள்**

சர்வதேச பொருளாதாரத்தில் இலங்கையின் பாதை வீழ்ச்சியாக காணப்படுகின்றது.

இலங்கையின் சாதாரண சேமிப்புத்துறை வீழ்ச்சியடைந்துள்ளது.(மூலம் -வீரகேசரி நாளிதல் 29.11.2017.) மத்திய வங்கியில் 2015ம் ஆண்டு குநடிசரயசல தொடக்கம் 2016 ஆயசஉா வரையான காலப்பகுதியில் இடம்பெற்றதாக பிணைமுறி ஊழலை விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழு நாட்டின் நிதி நிறுவனங்களில் ஏற்பட்ட

விளைவுகள் தொடர்பில் பின்வருமாறு கூறுகின்றது. அரசுக்கு ஏற்பட்ட மொத்த நட்டம் 11145மில்லியன் ஆகும். ஊழியர் நம்பிக்கை நிதியம், மகாபொல நிதியம், தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை காப்புறுதி நிறுவனம், காப்புறுதி கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் ஏற்பட்ட நட்டம் 8529அடைடழைெ ரூபா ஆகும். மீதித் தொகை ஏனைய நிதி நிறுவனங்களின் பணமாகும். இவ்வாறு நாட்டின் முக்கியமான நிதி நிறுவனங்களில் நிதி நெருக்கடி ஏற்பட்டது. மேலும் மேற்படி நிதி நிறுவனங்களின் மீது கொண்ட நம்பிக்கை பாதிப்படைந்தது என பிணைமுறிவிவகாரத்துக்கான ஜனாதிபதி ஆனைக்குழு தெரிவித்துள்ளது.

ஊழல் என்பது நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தும் விடயமாகும். அந்தவகையில் இலங்கையின் முன்னர் இருந்த அரசியல்வாதிகளின் ஊழலின் விளைவுகள் மறைமுகமாகக் காணப்படுகின்றது. மேலும் நாட்டின் பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தி கடன் சுமை அதிகரிப்பதற்கு ஊழல் ஒரு காரணமாகும்.

**பிணைமுறி விவகாரத்தில் அரசியல் ரீதியிலான விளைவுகள்**

பிணைகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின அறிக்கையால் ரவி கருணாநாயக்க (முன்னாள் நிதி அமைச்சர்) அரசியல் களத்தில் சலசலப்பு ஏற்பட்டது. அதன் விளைவாக அவர் மீது நம்பிக்கை இல்லா பிரேரணை கொண்டுவருவதற்கு கூட்டு எதிரணி ( 06.08.2017, 01-09 p.) முயற்சி செய்தது. ஆனாலும் அதற்கு முன்னரே ரவிகருணாநாயக்க தனது பதவியை ராஜினாம செய்தார்.( வீரகேசரி,11.08.2017,01-14.p)

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் பிரதமர் 20.11.2017. அன்று இறுதி சாட்சியம் அளித்தார்(வீரகேசரி,21.11.2017).

பின்னர கூட்டுஎதிரணியினாரால் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை முன்வைக்கப்பட்டது. ஆனாலும் அவர் தோற்கடித்தார்.

பிணைமுறி ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர் அரச அதிகாரிகள் போன்றோர் விசாரணைக்கு உட்படுத்தியமை அரசியல் அரங்கில் சலசலப்பிணை ஏற்படுத்தியதுடன் மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் நல்லாட்சி தொடர்பில் விமர்சனத்தையும் ஏற்படுத்தியது.

பிணைமுறி விவகாரத்தின் குற்றவாளிகளான அலோசியஸ், ககன்பலியசேன ஆகியோருடன் பாராளுமன்ற உறுப்பிணர்கள் தொலைபேசி தொடர்பில் இருந்தனர் என குற்றப்புலனாய்வு பிரிவினர் தெரிவித்தமை மாறும் சில அரசியல்வாதிகள் இதனை ஒப்புக்கொண்டனர். மேலும் அலோசியஸிடம் இருந்து தேர்தல் செலவுக்கான நிதி வாங்கினார்கள் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்ட நிலையில் சில அரசியலில் பெரும் பேசுபொருளாக மாறியது. பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் 340C-350C வரையான பக்கம் மட்டுமே பாராளுமன்றத்தில் வழங்கப்பட்டமைக்கு இதுவும் காரணமாகும்.( வீரகேசரி,30.03.2018,10p.)

பிணைமுறி ஊழலினால் அரசின் மீது மக்களுக்கு அதிர்ப்தி ஏற்பட்டதுடன் கூட்டாட்சியில் விரிசல் எற்படுவதற்கான ஆறம்ப விடயமாக இது காணப்பட்டது அதன் வழியாக இலங்கையில் 2018.11 மாதத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன ஐக்கிய தேசிய கட்சியுடன் அமைத்த கூடடரசாங்கத்தை மாற்றி இன்று அரசியல் ஸ்தரமின்மையை எற்படுவதற்கும் ஒரு வகையில் பிணைமுறி ஊழல் காரணமாக காணப்பட்டுள்ளது.

**சமூக விளைவுகள்**

பிணைமுறி ஊழல் விடயமானது நேரடியான பொருளாதார, அரசியல் விளைவுகளை நாட்டில் ஏற்படுத்தி இருந்தது. அதன் வழி பல நேரடி, மறைமுக சமூகவிளைவுகளுக்கும் காரணமாகக் காணப்படுகின்றது.

நுண் நிதி நிறுவனமானது தனியான ஊழியர்கள் தங்களின் எதிர்காலத்துக்காக தங்கள் உழைப்பின் ஒரு பகுதியை சேமித்து வைக்கின்ற இடமாகக் காணப்படுகின்றது. பிணைமுறி ஊழலில் நீகு நிறுவனத்தின் பணமும் பெருந்தொகையாக மோசடிக்கு உட்பட்டது இதனால மக்கள் தொழிலாளர்கள் அதிர்ப்தியடைந்தனர்.

மக்களின் பிரதான சேமிப்பு நிதி நிறுவனங்கள் பிணைமுறி உழல் நடவடிக்கையால் பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக நாட்டு மக்களின் சேமிப்பு ஆற்றல் , சேமிப்பு விருப்பம் ஆகியன பாதிக்கப்பட்டது.

பன்னாட்டு நாணய நிதியம், உலகவங்கி என்பனவற்றில் கடன்வாங்குவதற்கு அவர்களின் நிபந்தனைக்கு உட்படும் அரசாங்கம் நாட்டுமக்கள் தொடர்பில் அக்கறைகாட்டமையால் வறியவர்கள் மேலும் வறியவர்களாகின்றனர்.

நாட்டின் நிதி நிறுவனங்களில் நிதி பற்றாக்குறை ஏற்பட்டது. அதன்வழி கடன்களுக்கான வட்டி வீதம் உயர்வடைந்தது. இதனால் மக்கள் கடன் சுமையால் பாதிக்கப்பட்டனர். இதன் வழியாக வாழ்வாதார மேப்பாட்டுக்காக கடன் பெரும் நடுத்தர மக்கள் பாதிக்கப்படும் நிலையை இன் நிதி நெருக்கடி ஏற்படுத்தியுள்ளது.

**பிணைமுறி ஊழல் விவாகரத்துக்கு எதிரான நடவடிக்கைகள்**

மக்கள் விடுதலை முன்னனியின் பாராளுமன்ற உறுப்பினரான சுனில் ஹிந்துநெத்தி 2015.03.10 திகதி ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தியபோது இதனை வெளிப்படுத்தினார். 17.03.15 து.ஏ.்யின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க பிணைமுறி ஊழல் தொடர்பில் பாராளுமன்றத்தில் பிரதமரிடம் கேள்வி எழுப்பினார். இதன் பின்பு தான் இவ் ஊழல் மோசடி தொடர்பில் கவனம் ஏற்பட்டது.( வீரகேசரி ,31/12/2017 , 1-10 p.)

2016 ஆண்டுக்கான புதிய பாராளுமன்ற கோப்குழு தலைவராக தெரிவு செய்யப்பட்ட து.ஏ் பாராளுமன்ற உறுப்பினர். ஹிந்துநெத்தி தலைமையில் கோப்குழு இவ்விடயம் தொடர்பில் அறிக்கையை சட்டமா அதிபருக்கு கையளித்தது. இவ் அறிக்கைக்கு முன்னர் மத்திய வங்கியின் பிணைமுறி ஊழல் விவகாரம் தொடர்பில் முதல் தடவையாக கோப்குழு தலைவரான னு.ரு. குணசேகர தலைமையிலான கோப்குழு அறிக்கையை சபாநாயகரிடம் கையளிக்க இருந்த நேரம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. என்பது முக்கியமான விடயமாகும். ( வீரகேசரி,31/12/17,10 p.)

பிணைமுறி தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் 2015 ம் ஆண்டு ஏற்பட்ட வேளை இதன்போது நிலைமையை ஆராய்ந்த சட்டத்தரணி காமினி பிட்டிபல தலைமையில் பிரதமர் குழு ஒன்றை நியமித்து விசாரணை செய்தார். அதன் பின்னரே இவ் விசாரணை கோப்குழுவுக்கு வழங்கப்பட்டது. பின் கோப்குழு அறிக்கை 2016/10/28 திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. மேலும் கணக்காய்வாள நாயக அறிக்கையும் சேர்த்து சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டது.(வீரகேசரி,06/01/2017,17 p)

அதன் பின்னர் 2016/11/07 திகதி நிதி சபையின் ஊடாக பெர்ப்பர்ச்சுவல் ட்சரீஸ் நிறுவனத்துக்கு தடை விதிக்கப்பட்டதுடன் அந் நிறுவன நிதிப் பயன்பாட்டுக்கு தடை விதிக்கப்பட்டது. இதன் ஊடாக நிறுவனத்தின் 12 பில்லியன பணத்தொகை தடுத்து வைக்கப்பட்டது.(வீரகேசரி ,2016,11,08. p.)

பிரதமரின் பிட்டிபல உண்மையை தேடும் குழு 2015 பாராளுமன்ற கோப்குழு, 2016 பாராளுமன்ற கோப்குழு, தனது விசாரணை அறிக்கைகளை சட்டமா அதிபருக்கு கையளிக்கப்பட்ட வேளை இவ் அறிக்கைகள் ஒன்றுடன் ஒன்று முரண்பாடு உடையதான தகவல்களை உடையதாக காணப்பட்டது. (வீரகேசரி,06/01/2018,14p)இதன்பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிணைமுறி விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபருக்கு கையளிக்கப்பட்ட வேளை இவ் அறிக்கைகள் ஒன்றுடன் ஒன்று முரண்பாடு உடையதான தகவல்களை உடையதாக காணப்பட்டது.(வீரகேசரி ,06.01.2018 ,14p)

இதன்பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிணைமுறி விவகார பிரச்சினைகளை ஆரய ஜனாதிபதி ஆணைக்குழுவினை உருவாக்கினார். உயர் நீதிமன்ற நீதியரசர் மு.னு. சித்திரசிரி தலைமையில் நீதியரசர் G.S. ஜெயவரர்த்தன மற்றும் ஓய்வு பெற்ற கணக்காய்வாளர் வேலுப்பிள்ளை கந்தசாமி தலைமையில் ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. கொழும்பு புதுக்கடையிலுள்ள நிதியமைச்சின் கட்டிடத் தொகுதியில் இவ் ஆணைக்குழு அலுவலகம் அமைக்கப்பட்டது. ஜனாதிபதி ஆணைக்குழுவுடன் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து நடத்திய விசாரணையில் பிணைமுறி மோசடி தொடர்பில் பல உண்மைகள் வெளிப்பட்டன. 70 க்கும் மேற்பட்ட சாட்சியாளர்களின் சாட்சியத்தை இவ் ஆணைக்குழு பெற்றுக்கொண்டது. இதில் அர்ஜுன் அலோசியஸ், அர்ஜுன் மகேந்திரன் ஆகியோர் உள்ளடங்க 20 சாட்சியாளர்கள் மத்திய வங்கியின் ஊழியர்கள் மற்றும் ஊழிய சேமலாப நிதியத்தின் விநியோகஸ்தர்கள், பேன் ஏசியா வங்கி பிரதான விநியோகத்தர், சில அரச வங்கிகளின் அதிகாரிகள் மற்றும் முன்னால் நிதியமைச்சர் உள்ளிட்ட சில அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் முக்கியமாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்க நீண்ட பட்டியலிடம் இவ் ஆணைக்குழு நேரடி சாட்சியம் பெற்றுக் கொண்டது.

மேலும் இவ் ஆணைக்குழு 2013-2016 ஆண்டு வரையில் பேப்பர்ச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் சார்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்குகள் அனைத்தும் இதன் போது மீளாய்வுக்கு எடுத்து கொள்ளப்பட்டது. பெப்பர்ச்சுவல் நிறுவனம் உள்ளிட்ட பிணைமுறி விவகாரத்துடன் தொடர்புடைய அனைவரினது தொலைபேசி கலந்துரையாடல் ஆதாரங்களை கொண்டு விசாரனை நடத்தியது. குற்றப்புலனாய்வு பிரிவினரின் பூரண ஒத்துழைப்புடன் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.2015 ஜனவரி தொடக்கம் 2016 பெப்ரவரி வரையான பிணைமுறி விவகாரங்கள் ஆராயும் அதிகாரம் இவ் ஆணைக்குழுக்கு வழங்கப்பட்டது.( மூலம் - வீரகேசரி 2017.01.06,14 p.)

**ஆணைக்குழுவின் பொறுப்புகள்**

பிணைமுறியுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை ஆராய்ந்து பார்த்தல் மற்றும் திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களுக்கு வருவதும் அந்தத் தீர்மானங்கள் தொடர்பில் முன்மொழிவினை முன்வைத்தல் ஆகியன காணப்பட்டன.

**பிணைமுறி ஜனாதிபதி ஆணைக்குழுவின் முக்கியமான விடயங்கள்**

1257 பக்கங்களைக் கொண்ட முழுமையான அறிக்கையாகும். இப்பணியினை மேற்கொள்ள அவர்கள் 10 மாத காலத்தைச் செலவிட்டனர்.மத்திய வங்கியின் கட்டமைப்பு, அரச கடன் திணைக்களத்தினாலும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினாலும் முன்னெடுக்க வேண்டுமென ஆணைக்குழு அறிக்கை குறிப்பிடுகின்றது.மத்திய வங்கியின் கட்டமைப்பு அரச கடன் திணைக்களம் நேரடி பிணைமுறி இறைமை மற்றும் பிணைமுறியை ஏலத்தில் விடுதல் ஆகியவற்றின் சாதக பாதகங்களை மக்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளது.

2015 கநடிசரயசல 27 இடம்பெற்ற பிணைமுறி ஏலத்தின் மூலம் பேப்பர்ச்சுவல் நிறுவனத்தில் ஆகக் குறைந்தது 688 அடைடழைெ லாபம் ஏற்பட்டு இருக்கும். இது விசாரணைக்குட்படாத காலத்தை பார்த்தால் அதிகரிக்கும்.

இரண்டாவது நிலை சந்தையின் ஊடாக 11,145 அடைடழைெ லாபம் ஈட்டியுள்ளது. இதனால் ஊழியர் சேமலாப நிதியம் உள்ளிட்ட இதனுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களில் நட்டம் ஏற்பட்டுள்ளது.இந்த சூழலில் மத்திய வங்கியின் அதிகாரிகள் செயலற்ற நிலையில் காணப்பட்டுள்ளனர்.அரசு தனக்கு ஏற்பட்ட நட்டத்தினை ஈடு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியது.

அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தின் மொத்த தொகையானது 11,145 millions EPF, mahapola, NSP, இலங்கை காப்புறுதி நிறுவனம், காப்புறுதி கூட்டுத்தாபன நிதியம் ஆகியவற்றுக்கு 8529 அடைடழைெ ஆகும். ஏனைய தொகைகள் தனியார் துறைக்கு சொந்தமானது ஆகும். ( வீரகேசரி,04/01/18, 6p. 04/01/18 ,01p./07.01.18, 4p.)

- ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்த பழைய சட்டமூலத்தை ரத்து செய்து புதிய சட்டமூலத்தை அறிமுகம் செய்ய வேண்டும்.(வீரகேசரி ,04.10.2018,06p.)
- பதிவு செய்யப்பட்ட பத்திரங்களை மற்றும் கட்டளைகளை சட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். நாணய சபை உறுப்பினர்களையும் மத்திய வங்கி ஆளுனரையும் நியமிப்பதற்கு சட்டசபையின் ஒப்புதலை பெற்றுக்கொள்ள வேண்டும்.
- அரச கடன் திணைக்களத்தில் செயற்பாடுகளை கடும் கண்காணிப்பில் கொண்டு வர வேண்டும் மற்றும் 2008-2015 விசாரணை அதிகாரமின்மை அக்காலப்பகுதியும் விசாரிக்க வேண்டும் எனக் கூறியது.
- பேன் ஏசியா வங்கியுடனான கொடுக்கல் வாங்கல் முதலான செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும்..
- ஊழிய சேமலாப நிதியத்தை மீள் கட்டமைக்க வேண்டும்.
- புதிய சட்ட நடைமுறைகள் ஊடாக விரைவாக மோசடிப் பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ஆணைக்குழுவை முன்னெடுத்துச் சென்ற செலவினத்தை பேப்பர்ச்சுவல் நிறுவனத்திடம் அறவிடப்பட வேண்டும்.

இலங்கை மத்திய வங்கியின் இரகசியத்தன்மை, செயற்பாட்டு முறைமைகள் , கணக்காய்வு முறைமை ஆகியன பலவீனமாக இருந்தது. உதாரணமாக தொலைபேசி உரையாடல் பதிவுமுறை, கண்காணிப்பு கெமரா முறைமை போன்ற உயர்ந்த தொழிநுட்பமான வகையில் அமையவில்லை என்பது பெரிய குறைபாடாக இருந்தது.

பிணைமுறி ஜனாதிபதி ஆணைக்குழு சுட்டிக்காட்டிய குற்றங்கள் தொடர்பான விடயத்தில் முன்னால் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க பேப்பர்ச்சுவல் நிறுவனப் பணிப்பாளர் ஆலோசியஸ் முன்னால் மத்திய வங்கி ஆளுனர் அர்ஜுன் மகேந்திரன் பேப்பர்ச்சுவல் நிறுவன நிர்வாக பணிப்பாளர் கசுன் பலிசேன ஆகியோருக்கு எதிராக சிவில் குற்ற நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனக் கூறியது.(04.10.2018,06p.)

அடுத்ததாக ஊழல் விசாரணைகளை துரிதமாக முன்னெடுக்க விசேட மேல் நீதிமன்றத்தினை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் தந்தது. 1978 ஆம் 2ம் இலக்க நீதிமன்ற அமைப்பு சட்டத்தை திருத்தம் செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள வர்த்தமாணியை பாராளுமன்றத்தில் முன்வைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (வீரகேசரி,01/02/2018 ,1-10p) இதனடிப்படையில் விசேட உயர்நீதிமன்றம் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டது.

மத்தியவங்கியின் ஊழல் மோசடி தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றுமொரு ஆணைக்குழுவினை உருவாக்கினார். அதாவது பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் திலக் மாரப்பன் தலைமையில் உருவாக்கப்பட்ட இவ் ஆணைக்குழு ஐக்கிய தேசிய கட்சியின் ஊழலில் தொடர்புப்பட்டுள்ளதா என ஆராய்ந்தது. அந்த வகையில் இவ் அறிக்கையில் முன்னால் நிதி அமைச்சர் நிரபராதி என நிறுபிக்கப்படும் வரை ஐ.தே.க உயர்ந்த பதவியை வகிக்கக் கூடாது என பரிந்துரைத்தது. அதாவது ரவி இராஜினாம உண்மைக்கு புறம்பானது எனில் 1948 இன் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழு சட்ட மூலத்தின் 9வது சரத்துடன் இணைந்தது. தண்டணை சட்டக்கோவையில் 169 சரத்தின் கீழ் அல்லது 188 சரத்தின் ஊடாக வேறு சட்ட விதிகளின் பிரகாரம் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியுமா என்பதனை ஆராய்ந்து பார்கக் வேண்டும். எனவே இவர் உயர் பதவி வகுக்க கூடாது என கூறியது.(வீரகேசரி,01.02.2018,01p.)

மகேந்திரன் அலோசியஸ், பலியசேன சந்தேக நபர்களாக கோட்டை நீதிமன்றத்தினால் பெயரிடப்பட்டனர். குற்றப்புலனாய்வு பிரிவில் ஆஜராக February 02.2018 அன்று எடுத்து கூறியது.இலங்கை மத்தியவங்கியின் பிணைமுறி விநியோக நடவடிக்கையின் போது வெளிப்படுத்த முடியாத நிதி தொடர்பிலான இரகசிய தகவல்களை மத்தியவங்கியின் அதிகாரிகள் வழங்கியுள்ளனரா என விசாரணை ஒன்றினை நடத்துமாறு மத்தியவங்கி ஆளுனர் னுச.இந்திரஜித் குமாரசுவாமி கடந்த 2016.11.25 பொலிஸ்மா அதிபரிடம் செய்த முறையிடு தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவில் விசாரணைகளின் பிரகாரம் கோட்டை நீதிபதி இவ்வாறு உத்தரவு பிறப்பித்தார். ( வீரகேசரி,03.02.2018,01p.)

04,02,2018 அன்று கசுன் பலிய சேன ஆலோசியஸ் கைது செய்யப்பட்டனர். இன்றும் இவ் வழக்கு நீதிமன்றத்தில் இடம்பெறுகின்றது மேலும் முக்கியமான குற்றவாளியாகக் கருதப்படும் மத்திய வங்கி முன்னால் ஆளுனர் அர்ஜுன் மகேந்திரன் உள்ளிட்டோர் மீது கோட்டை நீதிமன்றத்தில் 1982ம் ஆண்டு 22 இலக்க பொதுசொத்து துஷ்பிரயோக சட்டம் 1837,07 இலக்க பங்குகள் பிணையங்கள், கட்டளைச்சட்டம், தண்டணைச் சட்டக் கோவை சட்டம் 113,386 பிரிவுகளின் படி அவர்கள் மீது வழக்கு தொடுக்கப் பட்டுள்ளது. மேலும் அர்ஜுன் மகேந்திரன் அவர்கள் தற்போது நாட்டை விட்டு தலைமறைவாகியுள்ளார். சர்வதேச பொலிசாரின் தகவலின் படி அவர் சிங்கப்பூரில் தலைமறைவாகியுள்ளார் என தெரிவிக்கப்பட்டது. இவரின் மீதான வழக்கின் எண் 8266/17 என்பது குறிப்பிடத்தக்கது.( வீரகேசரி,27.02.2018,01p)

இரண்டு முறை நீதிமன்றம் அர்ஜுன் மகேந்திரனுக்கு அழைப்பினை அனுப்பிய போதும் அவர் நீதிமன்றில் ஆஜராகவில்லை. சிவப்பு அறிவித்தலில் 192 நாடுகளில் எங்கு வேண்டுமானாலும் கைதுசெய்யப்படும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ளது.( வீரகேசரி,30.03.18,01p.)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கு அமைச்சர் னு.ஆ. சுவாமிநாதன் தலைமையில் அஜித் வு. பெரேரா அமைச்சர் ராஜித சேனாரத்ன போன்றோரைக் கொண்ட குழுவை நியமித்தார். .( வீரகேசரி,07/01/18, 1-10p.)

மேலும் இலங்கை குற்றம், ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்த குற்றவியல் பல்கலைக்கழகம் ஒன்றினை நிறுவுவதற்கு பிரதமர் தலைமையில் அமைச்சர் தலதா அத்துகோரல் ,அமைச்சர் சாகல ரத்நாயக்க கொண்ட குழு உருவாக்கப் பட்டது.

போலிஸ் நிலையங்களில் பதியப்பட்ட அரசியல் சார் வழக்குகளில் துரிதமான நிலையில் விசாரணை இடம்பெறுகின்றன என ஆராய்வதற்கு அமைச்சர்களான திலக மாரப்பன், ரன்ஜித் பத்தும பண்டார, சாகல ரத்நாயக்க உள்ளிட்டோர் கொண்ட குழு நியமிக்கப் பட்டது.(வீரகேசரி,10/08/17.09p.)

ஊழலினால் நலிவடைந்த மத்திய வங்கியின் பொருளாதார கட்டமைப்பினை வலுப்படுத்த சர்வதேச நிதிக்கூட்டுத்தாபனத்துடன் இணைந்து தேசிய நிதி முறைமை இணைப்பு மூலோபாயத்திட்டம் மத்திய வங்கியினால் முன்வைக்கப்பட்டது. (வீரகேசரி,21/03/18,13p.)

நாட்டு மக்களின் வரி நெருக்கடியை குறைக்கவும் அதே நேரம் வரி விதியின் மூலமே நாட்டின் பொருளாதார உயர்வினை அடைய புதிய இறைவரிச் சட்டம் 01/03/18 அன்று அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. 20 நேரடி வரி 40% அதிகரித்த போது 80 இருந்த மறைமுக வரி 60% குறைக்கப்பட்டது. (வீரகேசரி,03.09.2017,)

நிதியமைச்சின் கீழ் மீண்டும் மத்திய வங்கியின் (விசேட வர்த்தமானியில் ஜனாதிபதி வெளியிட்டார்.) கீழ் கொண்டுவரப்பட்டது. அரசியல் யாப்பின் 43(1) ஆம் அத்தியாயத்திற்கு அமைவாக 2064/26 எனும் வர்த்தமானி அறிவிப்பினூடாக உடன் அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. 2015 பிரதமரின் கீழ் 2015 september 21 திகதி 1933/13 ஆம் இல அறிவிப்பின் வர்த்தமானி ஊடாக வெளியிடப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.(வீரகேசரி, 03.01.2018,01p.)

குற்றப் புலனாய்வுப் பிரிவின் சந்தேக நபர்களான ஆலோசியஸ், அர்ஜுன் மகேந்திரனவுடன் தொடர்புடையவர்கள் எனக் கொள்ளப்படும் சில அரசியல்வாதிகளின் பெயர்கள் வெளியிடப்பட்டது. சிங்கப்பூர் பிரதமரிடம் பிரதமர் பிணைமுறி ஊழல் தொடர்பில் கலந்துரையாடினார். (வீரகேசரி,21/01/18, 1-10p.)

**இலங்கையில் பிணைமுறி ஊழலுக்கு எதிராக மேற்கொள்ளப்பட நடவடிக்கைகளில் உள்ள பிரச்சினைகள்.**

முதல் முதலில் து.ஏ. கட்சியினரால் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. பின்னர் இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்ற கோப்குழு தலைவராக காணப்பட்ட குணசேகர தலைமையிலான அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்குல் பாராளுமன்றமானது கலைக்கப்பட்டு இவ் விடயம் 2016 ஆண்டு பாரளுமன்ற தேர்தலுக்கு முன் வெளிப்படுவது தடுக்கப்பட்டது.

இலங்கையில் 2016 ஆண்டு பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னர் பிரதமர் ரணில் விக்ரமசிங்க பிணைமுறி விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கு சட்டத்தரணி காமினி பிட்டிபல தலைமையிலான குழுவை உருவாக்கியது குழு அறிக்கை பிரதமருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஆனாலும் நாட்டில் பரவலாக இவ் ஆணைக்குழுவுக்கு பிணைமுறி, மற்றும் நாட்டின் பொருளாதார சார் திடமான அறிவு இல்லை என விமர்சிக்கபட்டது என்பது முக்கியமான விடயமான உள்ளது.

கோப் குழுவிடம் பிணைகள் தொடர்பில் விசாரணை அதிகாரம் வழங்கப்பட்டது. கோப்குழு அறிக்கை 2016.01.20 திகதி பாராளுமன்றத்தில் கையளிக்கப்பட்டது. ( வீரகேசரி ,21.01.2016,p)இவ்வாறு பிணைக்குழு தொடர்பான விசாரணையை முன்னேடுத்த பிட்டிபல, கோப்குழு அறிக்கைகள் இரண்டும் ஒன்றொன்று முரண்பாடான விடயங்களை வெளிப்படுத்தின. இவ் ஆணைக்குழுக்களின் அறிக்கைப்படி உண்மை தன்மை தொடர்பில் கேள்வி

ஏற்பட்டது. மூன்றாவது விசாரணைக்குழுவாக பிணைமுறி ஜனாதிபதி ஆணைக்குழு 2017 ஆண்டு ஜனவரி 27 தனது விசாரணையினை முன்னேடுத்தது. இவ் விசாரணைக்கீழ் 2017 ஏப்ரல் ஓக்டோபர் மாதங்களில் மூன்று முறை மாதங்கள் கால நீடிப்பை பெற்று விசாரணைகள் செய்தது. இறுதியாக டிசம்பர் (2017) 8 திகதி மூன்று வார கால நீடிப்பை ஆணைக்குழுவில் அறிக்கை டிசம்பர் 30 திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.( வீரகேசரி ,01.01.2018,10p.)

ஒருவருடகாலமாக நீண்ட ஒரு விசாரணையே இவ் ஆணைக்குழு முன்னேடுத்தது விசாரணைகளின் போது நபர்களின் உரிமைகளுக்கு ஏற்ப சாட்சியமளிப்பதனை கட்டாயப்படுத்த முடியாது என இவ் ஆணைக்குழு தெரிவித்த கருத்து மக்களிடம் பெரும் விமர்சணங்களுக்கு உள்ளானது.(வீரகேசரி,14.09.2017, 01-10 p.)

என்னும் பிணைமுறி மோசடியை முழுமையாக விசாரித்து இவ் ஆணைக்குழு தன் அறிக்கையை ஜனாதிபதியிடம் டிசம்பர் 30ம் திகதி 2017 ஆண்டு கையளித்தது. ஆனாலும் மக்களுக்கு இவ் ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் பூரணமான விளக்கம் ஏற்படவில்லை. 30.12.2017 ஆனது மக்களுக்கு ஜனாதிபதி இவ்விடயம் தொடர்பில் விசேடமான உரையை நிகழ்த்தினர்.

இவ் அறிக்கை முதலில் சட்டமா அதிபருக்கு மட்டும் ஒரு பிரதி சமர்ப்பிக்கப்பட்டது. பாராளுமன்றத்தில் முதலில் சமர்ப்பிக்கவில்லை அது தொடரடபில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு விதபிரதிவாதங்கள் இடம்பெற்றது. 10.02.2018 ஆனது பாராளுமன்றம் அவசரமாக கூடி இவ்விடயம் தொடர்பில் விவாகிதது. பாராளுமன்றில் பிணைமுறி அறிக்கை பல்வேறு இலுபரிகரக்கு மத்தியில் கையளிக்கப்பட்டாலும் இவ் அறிக்கை ஆங்கில மொழியில் மட்டுமே காணப்பட்டமையினால் அவ் அறிக்கையினை கொண்டு பாராளுமன்ற விவாதம் நடத்தும் நிலை பாதிக்கப்பட்டது. மற்றும் 17.12.2017 இவ் அறிக்கையின் மொழிபெயர்ப்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதிகமான கால தாமதம் செய்தமை அரசின் கவனயீனத்தை எடுத்துக்காட்டுகின்றது.

ஊழல் மோசடி கையாள்வதற்கு இலங்கையில் விசேட நீதிமன்றம் உருவாக்கப்படலும் அதன் நடவடிக்கையில் முன்னேற்றம் காணப்படவில்லை. பிணைமுறி விடயத்தில் ஐக்கிய தேசிய கட்சியினர் தொடர்பட்டுள்ளனரா என்பதை ஆராய்வதற்காக பிரதமரினால் அமைச்சர் திலக் மாரப்பன தலமையில் குழுவினை உருவாக்கினார். மேலும் ஊழல்க்கு எதிரான நடவடிக்கை தொடர்பில் ஆராய னு.ஆ.சுவாமினாதன் தலைமையில் இன்னொரு குழு உருவாக்கினார். இவ் குழுவின் செயற்பாடுகள் காத்திரமணதாக அமையவில்லை.

மேலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலமையில் நிதி அமைச்சர் தலத் அத்துகோரல உள்ளடங்களாக இலங்கை உழல் இல்லாத நாடாக மாற்றுவதற்கான புலமைசார் நடிவடிக்கையாக குற்றவியல் பல்கலைக்கழகம் ஒன்றினை உருகாக்கும் முயற்சியினை உருவாக்கினர். இதன் நடைமுறைத்தன்மை கேள்விக்குறியாக உள்ளது.

ஆரம்பத்தில் கோட்டை நீதிம்றில் முன்னெடுக்கப்பட்ட பிணைமுறி வழக்கு விசாரணை துரிதகதியில் இன்றி முன்னேடுக்கப்பட்டது. 04.20.2018 அவர்கள் அன்று கைதுசெய்யப்பட்ட நிலையில் அவருக்கு எதிரான வழக்குகள் இன்றுவரை இடம்பெறுகின்றது.

ஆர்ஜீன் மகேந்திரனுக்கு எதிரான நீதிமன்றில் ஆஜராகதமைக்கு எதிராக 192 உலக நாடுகளில் உடன் கைது செய்யும் சக்தி வாய்ந்த சிவப்பு அறிவித்தல் வெளியீட்டு பல மாதங்கள் கடந்தும் அவர் கைதுசெய்யப்படவில்லை என்பது சட்டத்தின் நடைமுறை தொடர்பில் பாரிய கேள்வி ஏற்படுகின்றது.

சர்வதேச பொலிசாரின் உதவியுடன் அர்ஜீன் மகோங்ந்திரன் சிங்கப்பூரில் தலைமறைவாகிய விடயம் கண்டுபிடிக்கப்பட்டாலும் கூட அவரை இலங்கைக்கு அழைத்து வருவது அரசுக்கு பாரிய சவாலாக உள்ளதா. என்பது பொது மக்களின் கேள்வியாக உள்ளது.

ஊழலினால் நலிவடைந்த மத்திய வங்கி பொருளாதார கட்டமைபினை வலுப்படுத்தும் வகையில் சர்வதேச நிதிகூட்டு தாபனத்துடன் இணைந்து தேசிய நிதி முறைமை இணைப்பு மூலேபாய திட்டம் மத்தியவங்கி ஆளுனரான

இந்திரஜீத் குமாரசுவாமியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்பது முக்கியமான விடயமாகும்.

2016 - 4.5%, 2017. – 3.1% பொருளாதார வளர்ச்சி 2016 ஆண்டினை விட குறைவாக பதிவாகியுள்ளது என்பது முக்கியமான விடயமாக உள்ளது. நாட்டு மக்களின் வரிச்சுமையினை குறைக்க அரசாங்கம் 01.03.2018 ஆண்டு நடைமுறைக்கு கொண்டு வந்த வரிச்சீர்திருத்தச் சட்ட மூலம் 20 : 80 என காணப்படும் நேரடி வரிமுறையினை மாற்றி 40 : 60 என குறைத்து 80 வீதத்தினை மறைமுகமான வரியை 60 வீதமாக குறைத்து மக்களின் வரிச்சுமையை குறைத்ததாக அரசாங்கம் கூறியது ஆனாலும் மக்களின் பொருளாதர சுமை குறைந்ததாக தெரியவில்லை.

முக்கியமான நடவடிக்கையாக நிதிஅமைச்சின் கீழ் மீண்டும் மத்திய வங்கி கொண்டு வரப்பட்டமை காணப்படுகின்றது. 2064 / 26 எனும் விசேட அறிவித்தல் ஊடாக நடைமுறைக்கு வரும வகையில் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் இருந்த ( பிரதமர் ரணில் விக்ரமசிங்கரின் கீழ் இருந்த) மத்திய வங்கி, பிணையகங்கள் பரிவார்த்தனை ஆணைக்குழு நிதியமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. (வீரகேசரி,03.01.2018.10p.)

சிங்கப்பூர் பிரஜையான முன்னால் மத்திய வங்கி ஆளுனரான அர்ஜீன் மகேந்திரன் இலங்கை மத்திய வங்கி ஆளுனராக நியமிக்கப்பட்டமை மற்றும் பேப்பச்சுவல் ட்ரசரஸ் நிறுவனத்துக்கு பிணைகள் வழங்கள் ஆகிய விடயங்கள் அடிப்படையிலான காரணமாக இவ்விடயம் காணப்படுகின்றது மேலும் முன்னால் மத்திய வங்கி ஆளுனரான அர்ஜீன் மகேந்திரனனின் மருமகன் அலோசியஸ் என்பது ஒரு குடும்பம் திட்டமிட்டு மத்திய வங்கியில் மோசடி செய்திருப்பது தெரியவருகின்றது.

**10.முடிவுரை**

2015 ஆண்டு முதல் 2016 பெப்ரவரி வரையான காலப்பகுதியில் மத்திய வங்கி பிணைமுறி ஏல நடவடிக்கையில் இடம்பெற்ற ஊழல் இலங்கை நல்லாட்சி தொடர்பில் மக்கள் அதிர்ப்தியடைய செய்தது. பிணைமுறி விவகாரம் தொடர்பில் பிரதமரின் பிட்டிபல மற்றும் பாராளுமன்ற கோப்குழு , ஜனாதிபதியின் ஆணைக்குழு ஆகியன விசாரணை நடாத்தி தனது அறிக்கையை சட்டமா அதிபரிடம் கையளித்தது இது தொடர்பான விசாரணையும் தற்போது இடம்பெற்று வருகின்றது இந்நிலையில் அரசுக்கு மொத்தமாக 11145 மில்லியன் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.நாட்டின் பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடி ஏற்பட காரணமாகியது.வளர்ந்து வரும் இலங்கை நாட்டின் தலைமை நிதி நிறுவனத்தில் ஏற்பட்ட இவ் ஊழலினால் நாட்டின் அபிவிருத்தி கேள்விக்குறியாகியுள்ளது. அரசு பிணைமுறி உழல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதில் காலம் தாழ்த்தி வருகின்றது. இந்நிலையில் ஊழல் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டியதுடன் மற்றும் மத்திய வங்கியின் கடன் திணைக்கலங்களினை கடும் கண்காணிப்பில் கொண்டுவர வேண்டும் , மத்திய வங்கியின் இரகசியதன்மை செயற்பாடு முறைமை,கணக்காய்வு முறைமை ஆகிய விடயங்களை மீல் கட்டமைத்து உரிய வகையில் நடைமுறைப்படுத்துவதுடன் ஊழலற்ற வகையில் ஜனநாயக தன்மையுடன் நிலைத்த அபிவிருத்தியை நோக்கி நாட்டை வழிநடத்த வேண்டியது அவசியமாகும்.

References


- Vijayakumar,V.(2014).Economic Issues in Srilanka,Jaffna.
- Dilani,G.(2004). Poverty Measurement meaning methods and reguirements, Colombo Centre for poverty Analysis.
- Arivind K,J.(2001).Corruption A Revieve,Blackwell Publishers Ltd; Oxford.
- Sivakumar,N.(2014).Conceptualizing Corruption ; A Sri Lanka Perspective,University of Peradeniya.

- Hadiwattege,C. , De Silva ,L.,Pathirage,C.(2000).Corruption in Sri lanka Construction Industry.
- Lindiberg,J.,Orjuela,C.(2011).Corruption and Conflict ; Connection and Consequences in war – Town Sri lanka,Universty of Gothenburg.
- சேனாநாயக்க R.M.B, (2007).ஊழல் ஒழிப்பு மற்றும் அதனோடிணைந்த சட்டங்கள் குறித்த செறிவுச் சாராம்சம், கொழும்பு.